DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 75/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : முருகன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 23rd October 2025.

**1,2, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது வடக்குபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய சித்தி கடலாட்சி அவர்கள் தோட்டத்தில் நானும், என் அண்ணன் முத்துராசும் இருந்தோம். அங்கு வந்த சின்னகோவிலான்குளம் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும், முத்துராசும் கையொப்பம் செய்தோம். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

காயம்பட்ட கடலாட்சி எனக்கு எவ்வகையில் உறவினர் என்றால் அவர் எனது சித்தி. சம்பவம் நடந்து 10 நாட்கள் கழித்துபோலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. எனது சித்தி கடலாட்சியை மருத்துவமனையில் சேர்த்த அன்றே விசாரித்தார்கள். பார்வைமகஜரில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு படிக்கத்தெரியாது. அதனால் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. கடலாட்சி எனது உறவினர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டுக்கொடுத்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் போட்டுக்கொடுத்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**